# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301610

1. District : மாவட்டம் திருப்பூர்  PS: காவல்நிலையம் ஊ.க.க.மாடி.  Year: ஆண்டு 2026  FIR No.: முத.அ. எண் 12  Date: நாள் 28.08.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended Act 2018.  Sections பிரிவுகள்: Sec. 7
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: BNSS  Sections பிரிவுகள்: Sec. 106
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 27.08.26  Date from : நாள் முதல் 15.10  Date to : நாள் வரை 22.30
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.08.26  Time : நேரம் 13.00
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தெற்கு 2.8 கி.மீ. தொலைவு
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி நகராட்சி அலுவலகம், திருப்பூர்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : D. பாபு குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  (d) Nationality : நாட்டினம்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில்  (g) Address : முகவரி ஆய்வுக்கூட உதவியாளர், மாவட்ட ஆய்வு கூட அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திருமதி. ஸ்ரீ மாலா, க/பெ. பாஸ்கரன், நகர் நல அலுவலர், நகராட்சி அலுவலகம், திருப்பூர். 2) திருமதி. சுபத்ரா, த/பெ காலஞ்சென்ற ஸ்ரீ ராமன், நகராட்சி அலுவலகம், திருப்பூர். 3) திருமதி அன்பழகி, க/பெ. முனுசாமி, இளநிலை உதவியாளர். 4) திரு. சந்தோஷ், த/பெ. மகிமைராஜ், புதுவாடை தெரு, 5) திரு இலட்சுமணன், த/பெ கருப்பசாமி, இடை காவலர், 6) திரு நந்தகோபால், த/பெ ராஜாமணி, (நன்கொடை பெறுபவர் மாநகரம், நீரேழுவம், திருவண்ணாமலை மாவட்டம். 7) திரு. பாலகுமரன் த/பெ முருகன், 2வது குட. அலுவலர், 8) திரு அன்பு த/பெ. நடேசன், நகரியர், கோதாவரி மாநகரம், டி மகாராஷ்டிரா மாநிலம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் 9) திரு. கோபு என்ற த/பெ. கோவிந்தராஜ், அரசுப்பள்ளி ஆசிரியர், புதுவாடை, கிழக்கு மாவட்டம், 10) திரு அன்பு என்ற. த/பெ பழனிசாமி, நகரியம், அரசு கலைக்கல்லூரி, மாவட்டம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

அய்யா.

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் தகவல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/8/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

28.08.26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

28.08.26 - 14.30 hrs.

Name: பெயர்
Rank: நிலை

**பணிந்து அனுப்பப்படுகிறது.** ஐயா, நான் இன்று 28.08.2026-ம் தேதி 12.30 மணியளவில், நிலைய அலுவலில் இருந்தபோது, கடலூர் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.D.பாபு என்பவர் 28.08.2026 இன்று நிலையம் வந்து கொடுத்த புகார் மனு மீது இன்று 28.08.2026-ம் தேதி 13.00 மணிக்கு, விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண் 12/2026/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. அனுப்புநர்: திரு.D.பாபு, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், கடலூர். பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம் மாவட்டம். ந.க.எண்.ஆகு2/465/2026, நாள் 28.08.2026 ஐயா, பொருள்: திடீர் ஆய்வு - விழுப்புரம் மாவட்டம் - விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் நகராட்சி அலுவலகம் - 27.08.2026 அன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு மேற்கொண்டது - புகார் அளித்தல் - தொடர்பாக:- பார்வை: திடீர் ஆய்வு மகஜர் நாள்: 27.08.2026. திருD.பாபு, ஆய்வுக்குழு ஆய்வாளர், (முதுநிலை வருவாய் ஆய்வாளர்), மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் ஆகிய நான் 27.08.2026-ம் தேதி எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் குடிநீர் விநியோகம், தெரு விளக்கு பராமரித்தல், வரி வசூல் செய்தல், கட்டிட திட்ட அனுமதி வழங்குதல், பிறப்பு மற்றும் இறப்பு சான்று வழங்குதல், காலிமனை வரி விதிப்பு செய்தல், சாலை அமைத்தல், கட்டிட கட்டுமான பணிகள் செய்தல் போன்றவற்றிற்கு பொது மக்களிடம் இடைத்தரகர் மூலமாக இலஞ்சம் பெறுவதாக எனக்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் நான் விழுப்புரம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவுக்கு சென்று அங்கு பணியில் இருந்த செல்வி.ஈஸ்வரி, காவல் ஆய்வாளர், விழுப்புரம் மாவட்டம் அவர்களிடம், விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தை திடீராய்வு செய்வது குறித்து கலந்தாலோசித்து அதன்படி நானும் மற்றும் காவல் குழுவினரும் உடனடியாக இரண்டு வாகனங்களில் புறப்பட்டு சுமார் 15.10 மணியளவில் விழுப்புரம் நகராட்சி அலுவலகத்திற்கு வந்தடைந்தோம். மேற்படி விழுப்புரம் நகராட்சி அலுவலகமானது, ஆஸ்பிட்டல் ரோட்டில் உள்ள தெற்கு திசை பார்த்த வாசற்படியுடன் அமைந்துள்ளது. அலுவலகம் தரைத் தளம் மற்றும் முதல் தளத்துடன் அமைந்துள்ளது. தரைதளத்தின் இடது பக்கம் உள்ள அறையானது நகராட்சி ஆணையர் திருமதி. S.N. ஷ்யாமளா என்பவரது அறை பூட்டப்பட்டு இருந்தது. தரைத்தளத்தில் உள்ளே வலது பக்கத்தில் முதல் அறையானது கணினி வசூல் அறையாகும்.அந்த அறையில் யாரும் இல்லை. இந்த அறைக்கு பக்கத்தில் பொதுமக்கள் நின்று வரி செலுத்துவதற்காக அமைக்கப்பட்ட அறையாகும். அதற்கு பக்கத்தில் உதவி பொறியாளர் அறை உள்ளது. அந்த அறை பூட்டப்பட்ட நிலையில் உள்ளது.

அலுவலக தரை தளத்தில் உள்ளே தெற்கு திசையில் வருவாய் பிரிவு அறை உள்ளது. அந்த அறையில் பணிபுரியும் அலுவலர்கள் அனைவரும் தற்செயல் விடுப்பில் உள்ளதாக கூறினார்கள். அதன் பக்கத்தில் சுகாதார அறை உள்ளது. அதில் 1. திருமதி.ஸ்ரீபிரியா, க/பெ. பார்த்தீபன், நகர் நல அலுவலர் பணியில் இருந்தார். அவரிடம் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு அலுவலகத்தை திடீராய்வு செய்யப்போவதாக தெரிவித்துவிட்டு நகராட்சி ஆணையருக்கு தொலைபேசியில் ஆய்வாளர் அவர்கள் தொடர்பு கொண்டு பேசியபோது ஆணையர் தான் வெளியில் இருப்பதாகவும் உடன் வரவதாகவும் தெரிவித்தார். அதன் பிறகு இறையின் பக்கத்து அறையில் 2.திரு.வீ.ஞானப்பிரகாசம், த/பெ.வீரையன், சிறப்பு பதிவுறு எழுத்தர், 3.திருமதி.சுபஸ்ரீ, தற்காலிக தட்டச்சர் ஆகியோர் அவர்களது மேஜையின் முன் அமர்ந்து இருந்தார்கள். அதன் அருகில் பொதுப்பிரிவு அறை ஒன்று உள்ளது. அந்த அறையில் 4.திரு.வ.கதிரவன், த/பெ. வரதராஜன், உதவியாளர், 5.திருமதி.அ.அன்பரசி, த/பெ.அன்பழகன், இளநிலை உதவியாளர், 6.திரு.பெ.சுந்தரேசன், த/பெ.பெருமாள், பதிவறை எழுத்தர், 7.திரு.ஆ.அய்யப்பன், த/பெ.ஆறுமுகம், இரவு காவலர், 8.திருமதி.ச.ஸ்வேதா, க/பெ.சஞ்சீவி, தனிநபர், 9.திரு.க.தண்டபாணி, த/பெ.கலியபெருமாள், அலுவலக உதவியாளர், 10.திருமதி.ஷே.ரஹ்மாபீ, க/பெ.ஷேக் மகபு, தூய்மை பணியாளர், 11.திருமதி.சு.பரமேஸ்வரி, க/பெ.சுமன், தற்காலிக அலுவலக உதவியாளர், 12.திரு.முருகன், க/பெ.ராமசாமி, அலுவலக உதவியாளர், 13.திரு.பி.தி.சங்கர், த/பெ.தியாகராஜன், டேட்டா எண்ட்ரி ஆப்ரேட்டர், 14.திரு.க.செந்தில், த/பெ.கருணாநிதி, தூய்மை பணி மேற்பார்வையாளர், 15.திரு.மணிகண்டன், த/பெ.முனுசாமி, பதிவறை எழுத்தர், திருவெண்ணைநல்லூர், 16.திருமதி.அமலசிறியபுஷ்பம், மகளிர் திட்டம், 17.திரு.அ.அரவிந்த், த/பெ.அருணாச்சலம், ஆதார் கார்டு ஆப்ரேட்டர், 18. திருமதி.எஸ்.சித்ரா, க/பெ.யுவராஸ், தற்காலிக சமுதாய அமைப்பாளர், 19.திருமதி.ஆர்.அருணாதேவி, க/பெ.கோடீஸ்வரன், சமுதாய அமைப்பாளர், ஆகியோர் மேஜையின் முன் அமர்ந்திருந்தனர். 20.திரு.ஆர்.நந்தகோபால், த/பெ.ராதாகிருஷ்ணன், தனிநபர் 21.திரு.ஜே.ஹரால்ன், த/பெ.ஜோசப், ICIC Manager ஆகியோர் அலுவலகத்தில் நின்றிருந்தனர். அலுவலகத்தின் முதல் தளத்தில் இருந்த படிகட்டு வழியே முதல் தளத்திற்கு சென்று வலது பக்கத்தில் இருந்த நகராட்சி பொறியாளர் பிரிவு அறை, உதவி பொறியாளர் அறை, ஒர்க்கிங் இன்ஸ்பெக்டர் அறையும் பூட்டப்பட்ட நிலையில் இருந்ததது. அதன் பக்கத்தில் இருந்த உதவி திட்ட அமைப்பாளர் அறை இருந்ததது. அந்த அறையில் 22.திரு. பாலமுருகன், த/பெ.குருசாமி, உதவி திட்ட அமைப்பாளர் மேஜையின் முன்பு அமர்ந்திருந்தார். அதன் எதிர் திசையில் உள்ள அறையில் 23.திருமதி.எஸ்.வள்ளி, க/பெ.சுப்புராயன், தூய்மை பணியாளர், 24.திருமதி.ரா.திலகம், க/பெ.ராஜா, புல உதவியாளர், 25.திருமதி.சி.ஜெயபிரியா, க/பெ.சிவனேசன்,

துர்மை இந்தியா திட்டம் மேற்பார்வையாளர்,26.திரு.ப.அன்பழகன், த/பெ.பழஞ்சேத்தன், தூய்மை பணியாளர், 27. திருமதி.மோனிஷா, க/பெ.சுஜ்ஜித், பணி ஆய்வாளர் ஆகியோர்கள் இருந்தனர். அந்த அறையில் தனிநபர்களான 28.திரு.கே.ரகுராமன், த/பெ.கேசவன், சீனிவாணர் நகர், சாலாமேடு, விழுப்புரம், 29.திரு.ஆ.திருமலை, த/பெ.ஆறுமுகம், மாம்பலபட்டு, மெயின் ரோடு, தோகைபாடி, விழுப்புரம், 30.திரு.ந.அருள், த/பெ.நடேசன், கோதாவரி, சதுக்கம், டி.பி.டி.சி.நகர், விழுப்புரம் விஜயகுமார், 31.திரு.கா.அஸ்கர் அலி, த/பெ.காதர் அலி, கே.கே.ரோடு, விழுப்புரம், 32.திரு.கோ.கோகுல்நாத், த/பெ.கோபாலகிருஷ்ணன், தெற்கு தெரு, சாத்தப்பாடி, புவனகிரி, கடலூர் மாவட்டம், 33. திரு.அனிஷ்குமார், த/பெ.பரசுராமன், அடைக்கலபுரம், விக்கிரவாண்டி, 34.திரு.மு.புஷ்பராஜ், த/பெ.முத்துவேல், கெங்கை அம்மன் கோயில் தெரு. அரசு ரெட்டி பாளையம், மேட்டுபாளையம் அஞ்சல், விழுப்புரம் ஆகியோர்கள் இருந்தனர்.

மேற்படி தரைதள அலுவலகத்தில் இருந்தவர்களையும், முதல் தள அலுவலகத்தில் இருந்தவர்களையும் தரைத்தளத்தில் உள்ள பெரிய அறைக்கு அழைத்து வந்து அவர்களிடம் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களிடம் அலுவலகத்தை திடீராய்வு செய்யப்போவதாக தெரிவித்துவிட்டு பின்னர், அவர்கள் முன்னிலையில் எங்களை மீண்டும் சுய பரிசோதனை செய்த பின்பு மேற்படி அலுவலகத்தில் உள்ளவர்களையும், அலுவலகத்தையும் சோதனை செய்தபோது, பின்னர் எனது அறிவுறுத்தலின்படி காவல் குழுவினர் மேற்படி அலுவலகத்தையும், அங்கிருந்தவர்களையும் சோதனை செய்தபோது கீழ்கண்டவகையில் கணக்கில் வராத பணம் கைப்பற்றப்பட்டது.

<u>திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத ரொக்கப் பணம் விவரம்:</u>

1) திருமதி. ஸ்ரீபிரியா, க/பெ. பார்த்தீபன், நகர் நல அலுவலர், நகராட்சி அலவலகம், விழுப்புரம் அவர்களை சோதனை செய்தபோது என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

2) திரு.வீ.ஞானப்பிரகாசம், த/பெ. வீரையன், சிறப்பு பதிவுறு எழுத்தர், நகராட்சி அலுவலகம், விழுப்புரம் அவர்களை சோதனை செய்தபோது என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

3) திருமதி.சுபஸ்ரீ, தற்காலிக தட்டச்சர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.1,700/- (500X3, 100X2) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

4) திரு.வ.கதிரவன், த/பெ.வரதராஜன், உதவியாளர், நகராட்சி அலுவலகம், விழுப்புரம் அவர்களை சோதனை செய்தபோது என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

5) திருமதி.அன்பரசி, க/பெ.ரமணன், இளநிலை உதவியாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.1,000/- (500X1, 100X4, 50X2) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

6) திரு.சுந்தரேசன், த/பெ.பெருமாள், பதிவறை எழுத்தர் என்பவரை சோதனை செய்தபோது அவரது மேஜையில் இருந்து ரூபாய்.1,470/- (500X2, 200X1, 100X2, 20X1, 10X5) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

7) திரு.ஐயப்பன், த/பெ.ஆறுமுகம், இரவு காவலர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.10,500/- (500X21) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

8) திருமதி.ஸ்வேதா, க/பெ.சஞ்சீவி, (தனிநபர்) பில் கலெக்டர் உதவியாளர் என்பவரை சோதனை செய்தபோது என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

9) திரு.தண்டபாணி, த/பெ.கலியபெருமாள், அலுவலக உதவியாளர் என்பவரை சோதனை செய்தபோது என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

10) திருமதி.ரஹ்மாபீ, க/பெ.ஷேக் மகபு, துாய்மை பணியாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

11) திருமதி.பரேமேஸ்வரி, க/பெ.சுமன், அலுவலக உதவியாளர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

12) திரு.முருகன், த/பெ.ராமசாமி. அலுவலக உதவியாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் அவரிடம் பணம் ஏதும் இல்லை.

13) திரு.பி.டி.சங்கர், த/பெ.தியாகராஜன், டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

14) திரு.செந்தில், த/பெ.கருணாநிதி, துாய்மை பணி மேற்பார்வையாளர், அனந்தபுரம் பேரூராட்சி என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

15) திரு. மணிகண்டன், த/பெ.முனுசாமி, பதிவறை எழுத்தர், திருவெண்ணைநல்லூர் பேரூராட்சி என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

16) திருமதி.அமலாசிறியபுஷ்பம், க/பெ. ஏசுராஜா, மகளிர் திட்டம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

17) திரு.அரவிந்த், த/பெ.அருணாச்சலம், ஆதார் கார்டு ஆப்ரேட்டர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

18) திருமதி.சித்ரா, க/பெ.யுவராஜ், தற்காலிக சமுதாய அமைப்பாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

19) திருமதி.அருணாதேவி, க/பெ.கோடீஸ்வரன், சமுதாய அமைப்பாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

20) திரு.நந்தகோபால், த/பெ.ராதாகிருஷ்ணன், (தனிநபர்) பெரும்புலி கிராமம், சோழவரம், திருவண்ணாமலை மாவட்டம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.3,700/- (500X7,100X2) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

21) திரு.ஹாலன், த/பெ.ஜோசப், ICIC Bank Manager என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.

22) திரு.பாலமுருகன், த/பெ.குருசாமி, உதவி திட்ட அமைப்பாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.810/- (500X1,100X1, 50X1, 20X5, 10X6) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

23) திருமதி.வள்ளி, க/பெ.சுப்புராயன், தூய்மை பணியாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை

24) திருமதி.திலகம், க/பெ.ராஜா, புல உதவியாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை

25) திருமதி.ஜெயப்பிரியா, க/பெ.சிவனேசன், தூய்மை இந்தியா திட்டம் மேற்பார்வையாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை

26) திரு.அன்பழகன், த/பெ.பழஞ்சேத்தன், தூய்மை பணியாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை

27) திருமதி.மோனிஷா, க/பெ.சுஜ்ஜித், பணி ஆய்வாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை

28) திரு.ரகுராமன், த/பெ.கேசவன், தனிநபர், சாலாமேடு,விழுப்புரம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை

29) திரு.திருமலை, த/பெ.ஆறுமுகம், தனிநபர், தோகைபாடி, விழுப்புரம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை

30) திரு.அருள், த/பெ.நடேசன், தனிநபர், கோதாவரி சதுக்கம், டி.பி.டி.சி.நகர், விழுப்புரம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.30,160/- (500X60,100X1, 50X1, 10X1, 10X6) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

31) திரு.அஸ்கர் அலி, த/பெ.காதர் அலி, கே.கே.ரோடு, விழுப்புரம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை

32) திரு.கோகுல் நாத், த/பெ.கோகுலகிருஷ்ணன், சாத்தபாடி, புவனகிரி, கடலூர் மாவட்டம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.2,430/- (500X3,200X1, 100X6, 50X1, 20X3, 10X2) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

33) திரு.அனிஷ்குமார், த/பெ.பரசுராமன், தனிநபர், அடைக்கலம்புரம், விக்கிரவாண்டி, விழுப்புரம் மாவட்டம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.6,040/- (500X11, 100X5, 20X1, 10X2) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

34) திரு.புஷ்பராஜ், த/பெ.முத்துவேல், தனிநபர், அரசு செட்டிபாளையம், மேட்டுப்பாளையம் அஞ்சல், விழுப்புரம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை

அதன் பின்பு, மேலும் விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தின் உட்புறத்தினை சோதனை செய்ததில், சரவணன், Temperory Techinical Assistant என்பவரின் மேசையில் ரூபாய்.1000/-

(500X2) இருந்தது. மேற்படி தொகை குறித்து அங்கிருந்தவர்களிடம் கேட்க யாரும் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தினை சோதனை செய்தபோது கைப்பற்றப்பட்ட பணமானது,

| **வ.எண்** | **கைப்பற்றப்பட்ட பணம்** |
|---|---|
| 1) | ரூ.1,700/- |
| 2) | ரூ.1,000/- |
| 3) | ரூ.1,470/- |
| 4) | ரூ.10,500/- |
| 5) | ரூ.3,700/- |
| 6) | ரூ.810/- |
| 7) | ரூ.30,160/- |
| 8) | ரூ.2,430/- |
| 9) | ரூ.6,040/- |
| 10) | ரூ.1,000/- |
| ஆக மொத்தம் | **ரூ.58,810/-** |

இந்த திடீராய்வின்போது, விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தினை சோதனை செய்தபோது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத தொகையான **ரூ.58,810/-** (ரூபாய் ஐம்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று பத்து மட்டும்)னை அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் இருந்து இலஞ்சமாக பெற்று வைக்கப்பட்டிருந்த பணமாக இருக்ககூடும் என விசாரணையில் தெரிய வருவதால் மேற்படி தொகையினை மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன்.

மேலும், விழுப்புரம் நகராட்சி அலுவலக இரவு காவலர் திரு.ஐயப்பன் என்பவரது G Pay phone number- 9047109827 என்ற எண் தொடர்புடைய விழுப்புரம் பேங்க் ஆப் பரோடா வங்கி கணக்கிற்கு 01.08.2026 முதல் 26.08.2026 வரையில் ரூபாய் 80,700/- அளவிற்கு பல்வேறு சந்தேக நபர்கள் மூலமாக பணபரிவர்த்தனை நடைபெற்றுள்ளது. அதுபோலவே, விழுப்புரம் நகராட்சி அலுவலக பதிவுறு எழுத்தர் திரு. சுந்தரேசன் என்பவரது G Pay phone number- 8870863407 என்ற எண் தொடர்புடைய விழுப்புரம் பேங்க் ஆப் பரோடா வங்கி கணக்கிற்கு 01.06.2026 முதல் 26.08.2026 வரையில் 1,55,144/- அளவிற்கு பல்வேறு சந்தேக நபர்கள் மூலமாக பண பரிவர்த்தனை நடைபெற்றுள்ளது.

மேற்படி நபர்களின் G pay மூலம் இலஞ்ச பணமாக அலுவலக பணியாளர்களின் வங்கி கணக்கிற்கு செலுத்தப்பட்டுள்ளது என விசாரணையில் தெரிய வருகிறது. மேலும், இவ்வலவலக

பணியாளர்களின் G pay மூலமான பண வரவினை பார்க்கும்போது இடைத்தரகர்களிடம் இலஞ்சமாக பல லட்ச ரூபாய் அளவிற்கு பணம் பெற்றுள்ளது விசாரணையில் தெரிய வருகிறது.

மேற்படி விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் இருந்த பதிவேடுகளான பொது பிரிவு வருகை பதிவேடு-2026, தினசரி கையிருப்பு தொகை குறித்த பதிவேடு-2026, முகாம் இயக்க பதிவேடு-2026, பொது பிரிவு தற்செயல் விடுப்பு பதிவேடு-2026, பொது பிரிவு நடப்பு பதிவேடு-2026, வருவாய் பிரிவு வருகை பதிவேடு-2026, பொறியியல் பிரிவு வருகை பதிவேடு-2026, வருவாய் பிரிவு நாட் குறிப்பு பதிவேடு-2026 ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

பிறகு அலுவலகத்தில் இருந்த உதவியாளர், அலுவலக பணியாளர்கள் மற்றும் அலுவலகத்தினுள் இருந்தவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீராய்வின்போது அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு தொடர்பாக பொதுமக்கள் புகார்கள் தெரிவிக்க வேண்டிய ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்தின் விபரம் அலுவலகத்தில் வைக்கப்படவில்லை. விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் இருந்தவர்கள் அனைவரும் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். அலுவலக பெண் ஊழியர்கள் பெண் காவலர் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டார்கள். மேலும் அலுவலக உடமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் விழுப்புரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் நான் சொல்ல ஆய்வாளர் செல்வி.ந.ஈஸ்வரி என்பவரால் தட்டச்சு செய்யப்பட்டது. மகசர் முடிக்கும் வரை நகராட்சி ஆணையர் அலுவலகத்திற்கு வரவில்லை. இந்த திடீராய்வு மகசர் இன்று 27.08.2026-ம் தேதி மாலை சுமார் 15.10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 27.08.2026-ம் தேதி இரவு 22.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீர் ஆய்வு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட இலஞ்ச தொகை மற்றும் விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் கண்டெடுக்கப்பட்ட கணக்கில் வராத தொகையாக **ரூ.58,810/-** (ரூபாய் ஐம்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று பத்து மட்டும்) கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக சம்மந்தப்பட்ட அலுவலர்களான 1) திருமதி. ஸ்ரீபிரியா, க/பெ. பார்த்தீபன், நகர் நல அலுவலர், நகராட்சி அலுவலகம், விழுப்புரம், 2. திருமதி.சுபஸ்ரீ, தற்காலிக தட்டச்சர், நகராட்சி அலுவலகம், விழுப்புரம், 3. திருமதி.அன்பரசி, க/பெ.ரமணன், இளநிலை உதவியாளர்,4. திரு.சுந்தரேசன், த/பெ.பெருமாள், பதிவறை எழுத்தர், 5. திரு.ஐயப்பன், த/பெ.ஆறுமுகம், இரவு காவலர், 6.திரு.நந்தகோபால், த/பெ.ராதாகிருஷ்ணன், (தனிநபர்) பெரும்புலி கிராமம், சோழவரம்,

திருவண்ணாமலை மாவட்டம், 7. திரு.பாலமுருகன், த/பெ.குருசாமி, உதவி திட்ட அமைப்பாளர், 8. திரு.அருள், த/பெ.நடேசன், தனிநபர், கோதாவரி சதுக்கம், டி.பி.டி.சி.நகர், விழுப்புரம், 9. திரு.கோகுல் நாத், த/பெ.கோகுலகிருஷ்ணன், சாத்தபாடி, புவனகிரி, கடலூர் மாவட்டம், 10. திரு.அனிஷ்குமார், த/பெ.பரசுராமன், தனிநபர், அடைக்கலம்புரம், விக்கிரவாண்டி, விழுப்புரம் மாவட்டம் ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள sd xxxxxxx (D.Babu) ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், கடலூர். இணைப்பு: 1. திடீர் ஆய்வு மகஜர் நாள்.27.08.2026, 2. ரொக்கம் ரூ.58,810/-, 3.34 நபர்களின் வாக்குமூலங்கள், 4. பொது பிரிவு வருகை பதிவேடு-2026, 5. தினசரி கையிருப்பு தொகை குறித்த பதிவேடு-2026, 6. முகாம் இயக்க பதிவேடு-2026, 7. பொது பிரிவு தற்செயல் விடுப்பு பதிவேடு-2026, 8. பொது பிரிவு நடப்பு பதிவேடு-2026, 9. வருவாய் பிரிவு வருகை பதிவேடு-2026, 9. பொறியியல் பிரிவு வருகை பதிவேடு-2026, 10. வருவாய் பிரிவு நாட்குறிப்பு பதிவேடு-2026.

ஐயா,

இன்று 28.08.2026-ஆம் தேதி மதியம் 13.00 மணிக்கு மேற்படி புகார் மனு மீது, விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 12/2026/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS-ன்படி வழக்கு பதிவு செய்து கொண்டேன். ஒப்பம்.xxxx (ந.ஈஸ்வரி) காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம்.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அசல் புகார் மனு மற்றும் இரு துறை திடீர் கூட்டுசோதனையின் செயல்முறை ஆகியவற்றை மாண்புமிகு மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி ஊழல் தடுப்பு வழக்குகள் நீதிமன்றம், விழுப்புரம் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிக்கொள்ளப்பட்டது.

28.08.26